திட்டமிட்டு மறுக்கப்படுகிறது. ஒருபுறத்திலே ஜாமீன் என்று சொல்லக்கூடிய செக்யூரிட்டி கேட்கப்படுகிறது. எஸ்.சி./எஸ்.டி. மாணவர்களும்கூட எம்.எட்., பி.எட்., டீச்சர் டிரெயினிங் படிக்கக்கூடிய நேரத்தில் கல்விக் கடன் பெற முடியாமல் பாதியிலே படிப்பை நிறுத்தக்கூடிய அவல நிலை நீடிக்கிறது. வங்கிகளைக் கேட்டால், வங்கி அதிகாரிகள் எங்களை யாருமே கட்டுப்படுத்த முடியாது என்கிறார்கள். அரசு ஒரு கட்டணத்தை நிர்ணயித்துள்ளது; வங்கிகள் ஒரு கட்டணத்தை நிர்ணயித்திருக்கிறது. உதாரணமாக, பி.எட். படிப்பதற்கு 60,000 ரூபாய் என்று சொன்னால், 14,000 ரூபாய் மட்டுமே வங்கிகளிலே கல்விக் கடன் வழங்குவதாக இருக்கிறது. ஆக, இத்தகைய நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி, ஏழையெளிய மாணவர்கள் உயர் கல்வி பெறுவதற்கான கல்விக் கடனை வங்கிகளிடமிருந்து பெறுவதற்கு ஒரு உரிய வழிகாட்டுதலைக் கொண்டு வர, நமது அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களைப் பொறுத்தவரையில், கல்விக் கட்டணம் செலுத்துவதில் எந்தவிதமான குறைபாடும் ஏற்படவில்லை. இந்த வேளையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எவருடைய பெயரையும் சொல்லாமல் ஒரு கருத்தைச் சொல்கிறார். இதுவரையில் எந்தவிதமான ஒரு குறைபாடும் மாணவர்களிடத்திலேயிருந்து அரசுக்கு வரவில்லை. இதனால் யாரேனும் தனி நபர் பாதிக்கப்பட்டதாக நீங்கள் குறிப்பிட்டால், இதுபற்றி அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழ. கருப்பையா, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 மார்ச் 28]

5—

உணவு விடுதிகள்

***8129—திரு. பழ. கருப்பையா:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை துறைமுகம் தொகுதி, அரசு மருத்துவமனையின் உணவு விடுதிகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்திட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சென்னை துறைமுகம் தொகுதி, பொது மருத்துவமனையின் உணவு விடுதிகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்திட, அந்த நிறுவனத்தைச் சார்ந்த பணியாளர்கள்/அலுவலர்கள்/மருத்துவர்கள் ஆகியோர் குறைந்தது 25 நபர்கள் சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின் அட்டவணை 1–இல் வரையறுக்கப்பட்ட படிவம் 1–ஐப் பூர்த்தி செய்து, கூட்டுறவுச் சங்க உணவகம் அமைக்கப்படவுள்ள சரகத்தின் துணைப் பதிவாளருக்கு உத்தேசிக்கப்பட்ட கூட்டுறவு உணவகத்தின் துணை விதிகளின் நகல்களுடன் முறையாக விண்ணப்பித்தால், கூட்டுறவு உணவகம் அமைக்க, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பழ. கருப்பையா அவர்கள்.*

திரு. பழ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே துறைமுகம் பகுதி பொது மருத்துவமனையில் கூட்டுறவுச் சங்கங்களால்தான் அந்த உணவு விடுதிகள் நடத்தப்பட்டு வந்தன. அதற்குப் பிறகு இன்றைக்கும் அந்தப் பண்டகசாலை மிக வெற்றிகரமாக மருத்துவர்கள் அடங்கிய கூட்டுறவுச் சங்கத்தால்தான் நடத்தப்பட்டு வருகிறது. அதற்குப் பின்பு ஏற்பட்ட அரசியல் குறுக்கீடுகள் காரணமாக 1981–இலிருந்து இன்றுவரை அது தனியார்கள் கையிலேயே இருந்துவருகிறது.* National Association of Educated Self Employed Youths *என்கிற பெயரில் 1981–இல் இந்த உரிமையைப் பெற்றவர்கள் ஒவ்வோர் ஆண்டும் புதுப்பித்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் இருந்தும், எப்படியோ இவற்றைத் தொடர்ந்து*

31 ஆண்டுகளாக இரண்டு தனி நபர்கள் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். நியாயமாக மிகக் குறைந்த வாடகையில் அது விடப்படுகிறது. மிகக் குறைந்த மின்சாரக் கட்டணம், தண்ணீர் இலவசமாக வழங்கப்படுகிறது. இவ்வளவும் பொது மருத்துவமனையில் அவர்களுக்கு வழங்கப்படுவதன் நோக்கம் மிகக் குறைந்த விலையிலே அவர்கள் உணவுப் பண்டங்களை விற்க வேண்டும் என்பதுதான். அவர்கள் 33 ரூபாய்க்குச் சாப்பாட்டை விற்கிறார்கள். ஆனால் ஒரு முறை போட்டுவிட்டு, சாம்பாரை ஊற்றிவிட்டு நிமிர்ந்து பார்த்து மறுபடியும் போடுவார்களா என்று கேட்டால், இத்தோடு முடித்துக்கொள், எழுந்திரு, ஒரு கிண்ணம்தான், அந்த 33 ரூபாய்க்கு என்று சொல்கிறார்கள். இவ்வளவு சலுகைகளையும் அரசிடம் இருந்து பெற்றுக்கொண்டு, தனியார் லூட்டி அடிப்பதற்குக் காரணம், தனியார் எப்போதும் இலாப நோக்கம் கொண்டவர்கள். மருத்துவர்கள் என்னிடம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலாவது இதை மாற்றித் தரக் கூடாதா என்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

திரு. பழ. கருப்பையா: *மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலாவது இவற்றை மாற்றித் தரக் கூடாதா என்று கேட்கிறார்கள். இது ஒன்றே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்குக் கிடைத்திருக்கின்ற பாராட்டு. மூன்று ஆண்டுகள், நான்கு ஆண்டுகள் என்று தொடர்ந்து இவர்களே 33 ஆண்டுகளாக ஆதிக்கம் செலுத்தி வருகின்ற நிலையில் இருந்து அந்த உணவுப் பண்டகச் சாலையினை மருத்துவர்கள் நடத்திக்கொள்வதுபோல, தனியாரிடமிருந்து இதை விடுவிக்க வேண்டும். அவர்கள் உணவகம் நடத்துவதற்கான அனுமதி இந்த ஆண்டோடு ஓரிரு மாதங்களில் முடிகிறது. தற்போது மருத்துவர்கள் கூட்டுறவு முறையில் நடத்துவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் விரும்பியவாறு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலாவது இந்த மாற்றம் ஏற்பட வேண்டும் என்றுதான் இதைக் கூட்டுறவுச் சங்கம் ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணவு விடுதிகளைக் கூட்டுறவுச் சங்கம் நடத்த முன்வருமா என்றுதான் கேட்டிருக்கிறார்கள். எனவே, அந்த மருத்துவமனையில் உள்ள*

பணியாளர்கள் / அலுவலர்கள்/மருத்துவர்கள் யாரேனும் அந்த உணவு விடுதிகளைக் கூட்டுறவுச் சட்ட விதிகளின்படி நடத்துவதற்கு விண்ணப்பித்தால் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதைப் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

6—

புறவழிச் சாலை

***1556—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பேரூராட்சியில் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பேரூராட்சிகளில் வாகனப் போக்குவரத்து உயரும்போது, புறவழிச் சாலை அமைக்க, அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

திரு. எஸ்.பி. முத்துக்குமரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மம்சாபுரம் பேரூராட்சிப் பகுதியில் இருக்கக்கூடிய இந்தப் புறவழிச் சாலை அமைக்கின்ற திட்டமானது ஆய்வு செய்யப்பட்டு